# 7

# குடும்பச் சட்டச் சமரசம்

TML 007

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடும்பச் சட்டச் சமரசம்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் பிரியும்பொழுது சட்டமுறையிலான பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். உதாரணமாக நீங்கள் உங்களுக்கான பொருளாதார ஆதரவுபற்றித் தீர்மானிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளை எப்படிப் பராமரிப்பது மற்றும் குடும்பச் சொத்துக்களை எப்படிப் பிரிப்பது போன்றன பற்றியும் முடிவு எடுக்க வேண்டும். இம்முடிவுகளை எடுப்பதற்காக நீங்கள் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும். இதற்குப் பதிலாக இவை சம்பந்தமாக விதிக்கப்பட்ட முறைமைகளுக்கு வெளியே உங்கள் சொந்த ஏற்பாடுகளையும் நீங்கள் ஒழுங்கு செய்யலாம். அல்லது **மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வு** (alternative dispute resolution – ADR) வழிமுறையையும் பயன்படுத்தலாம்.

உங்களுடன் வன்முறையில் நடந்த அல்லது உங்களைத் துர்ப்பிரயோகம் செய்த ஒருவருடன் உங்கள் சர்ச்சையைத் தீர்ப்பதற்கு ADR வழிமுறையைப் பின்பற்ற **வேண்டாம்.** உங்களிடம் அடாவடித்தனமாக நடக்க முயன்ற அல்லது உங்களைவிடக் கூடிய அதிகாரத்தைக் கொண்ட ஒருவருடன் சர்ச்சையைத் தீர்க்கவும் இவ்வழிமுறையைப் பயன்படுத்த **வேண்டாம்.**

## சமரசம் என்றால் என்ன?

சமரசம் (arbitration) என்பது ஒரு வகையான **மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வு** (ADR) ஆகும். மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வு என்பது நீதிமன்றத்துக்குப் போகாமலே சட்டப்பிரச்சினைகளை மக்கள் தீர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு வழி ஆகும். குடும்பச் சட்டம் தொடர்பான ஒரு வழக்குக்கு ADR முறையினைப் பின்பற்றும்படி உங்களை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது. நீங்களும் உங்களின் முந்திய துணைவரும் இவ்வழியினைச் சுதந்திரமான முறையில் தெரிவு செய்ய வேண்டும்.

சமரசமுயற்சியில் நீங்களும் உங்கள் முன்னைய வாழ்க்கைத் துணைவரும் உங்கள் முரண்பாட்டினைத் தீர்க்கவென ஒரு மூன்றாவது நபரைச் சம்பளத்திற்கு அமர்த்துவீர்கள். இந்த நபர் **சமரசமுயற்சியாளர்** (arbitrator) எனப்படுவார். இந்தச் சமரசமுயற்சியாளர் விவாகரத்து (divorce) அல்லது விவாகத்தள்ளுபடி (annulment) ஒன்றினை வழங்கமுடியாது. ஆனால் பிள்ளைகளின் கட்டுக்காப்பு, ஆதார உதவித்தொகை, பிள்ளைகளின் அணுகல் உரிமை மற்றும் சொத்தினைப் பிரிக்கும் முறை என்பவற்றை அவர் தீர்மானிக்க முடியும். சமரசமுயற்சியாளர் நீங்கள் தீர்க்கும்படி கேட்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக மட்டுமே தீர்ப்பு வழங்கலாம். மேலும் அவர் கனேடிய அல்லது ஒன்ராறியோ குடும்பச் சட்டத்தை மட்டுமே தனது சேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

சமரசம் என்பது ஒரு நீதிமன்ற வழக்குப் போன்றதாய், அதேசமயம் சம்பிரதாய ஒழுங்கு முறைகள் குறைந்த ஒரு நடைமுறையில் இடம்பெறும். இதற்குப் பெரும்பாலானவர்கள் ஒரு சட்டத்தரணியை நியமித்துக் கொள்கின்றனர். இதற்கான விசாரணையின் பொழுது நீங்களும் உங்கள் முந்திய துணைவரும் சாட்சியமளித்து உங்கள் விடயத்தில் நீதியான வழி என்னவென்று கூறமுடியும். நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனி உங்கள் உரையை முடித்த பின்பு சமரசமுயற்சியாளர் சம்பந்தப்பட்ட விடயம் பற்றித் தனது முடிவினை எடுப்பார். அவரது முடிவு **சமரசத் தீர்வு** (arbitral award) என்று அழைக்கப்படும்.

கனேடியச் சட்டங்களின் கீழ் உங்களுக்கு இருக்கும் உரிமைகள் பற்றி நீங்கள் அறிந்து இருக்கவில்லை என்றால் சமரச முயற்சிக்கு உடன்படுவதற்கு முன்பாகச் சட்டத்தரணி ஒருவருடன் அதுபற்றிக் கதையுங்கள். சமரசமுயற்சி ஆரம்பித்த பின்னர் நீங்கள் அதில் இருந்து விலகிச் செல்லமுடியாது. நீங்கள் சமரசமுயற்சியாளரின் தீர்மானத்துடன் இணங்கவில்லை என்றாலும் அதற்குப் பணிந்து நடக்க வேண்டும். கனேடிய சட்டங்களைப் பின்பற்றிச் சமரசத் தீர்வு வழங்கப்படும் என்றால் சம்பந்தப்பட்டவர்கள் அதற்குச் சட்டரீதியாகக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

சமரசம் பணச்செலவுடன் கூடியதாக இருக்கும் ஏனெனில் உங்களுக்கு ஒரு சட்டத்தரணி தேவையாக இருக்கும். அத்துடன் சமரசமுயற்சியாளருக்கும் நீங்கள் கட்டணம் செலுத்தவேண்டி இருக்கலாம். விசாரணை நடைபெறும்பொழுது உங்களுடன் ஒரு சட்டத்தரணியை நீங்கள் கூடவே வைத்திருக்காத போதிலும் சமரசமுயற்சிக்கு ஒப்புக்கொள்வதற்கு முன்னர் சட்டரீதியான புத்திமதியை நீங்கள் பெற்றிருப்பதாக நிரூபிக்கவேண்டி இருக்கும். சமரச முயற்சியாளரும் சட்டத்தரணியும் கட்டணமாகப் பெறும் பணத்தைப் பொறுத்து இதற்கான செலவு அமையும். குடும்பச் சட்ட சமரச முயற்சிக்கு சட்ட நிதியுதவி அமைப்பு (Legal Aid) பணம் கொடுக்க மாட்டாது.

## மத்தியஸ்த முயற்சியில் இருந்து சமரசம் எவ்வாறு வேறுபடுகிறது?

**மத்தியஸ்தம்** என்பதும் சமரசம் என்பதும் ஒன்றுதான் என மக்கள் பெரும்பாலும் நினைக்கின்றனர். அது அப்படி இல்லை. மத்தியஸ்தம் என்பது மாற்றுமுறைச் சர்ச்சை தீர்வு (ADR) வழிமுறைகளில் இன்னுமொன்றாக அமைந்துள்ளது. மத்தியஸ்தம் நடைபெறும்பொழுது பயிற்சி பெற்ற மத்தியஸ்தர் ஒருவர் மனிதர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வர உதவுகிறார். நீங்கள் மத்தியஸ்த முயற்சியில் இறங்கினால் உங்கள் விருப்பத்திற்கமையச் செய்யக்கூடிய தெரிவுகள் இருக்கும். பேச்சுவார்த்தையை நீங்கள் எந்த நேரத்திலும் நிறுத்திக் கொள்ளலாம். உங்கள் துணைவர் வழங்க முன்வருவதை அல்லது மத்தியஸ்தர் கூறும் ஆலோசனையை நீங்கள் ஏற்க மறுக்கலாம். ஆனால் சமரசமுயற்சியில் உங்கள் விருப்பத்தின்படி செய்யக் கூடியனவாக ஒன்றும் இருக்காது. சமரசமுயற்சியாளரின் தீர்மானத்தை நீங்கள் கட்டாயம் ஏற்கவேண்டும். அத்தீர்மானம் சட்டத்தைப் பின்பற்றி எடுக்கப்படும் வரையில் இது ஒரு கட்டாய நிபந்தனையாக இருக்கும். சில சூழ்நிலைகளில் ஒரு குடும்பச் சமரசத் தீர்வு பற்றி நீதிமன்றத்திடம் நீங்கள் மேன்முறையீடு செய்ய முடியும்.

## பிரத்தியேகமான ஒப்பந்தத்தில் இருந்து சமரசம் எப்படி வேறுபடுகிறது?

சிலசமயங்களில் பெண்கள் தாம் மதித்து நடக்கின்ற மருத்துவர் அல்லது சமயத் தலைவர் போன்ற ஒருவரிடம் குடும்பச் சட்டம் சம்பந்தப்பட்ட ஒரு சர்ச்சை பற்றி முடிவு செய்யும்படி கேட்கும் நிலைக்கு மற்றவர்களால் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு கேட்கப்படுபவர் ஒரு சமரச முயற்சியாளராக இல்லாவிடில் அவரது முடிவு சட்டரீதியில் சம்பந்தப்பட்டவர்களைக் கட்டுப்படுத்துவதாக அமைய மாட்டாது. அதனை நடைமுறைப்படுத்தவும் முடியாது.

உங்களுடைய வழக்கு பற்றி முடிவு எடுப்பவர் உண்மையான ஒரு சமரச முயற்சியாளராக இருப்பாரோ அல்லது இல்லையோ என்று நீங்கள் கவலை கொண்டால், இப்படியான பணியைச் செய்வதற்கு அவர் தகைமை பெற்றுள்ளர் என்பதற்கு நிரூபணம் (proof) காட்டும்படி அவரை கேளுங்கள். ஒன்ராறியோவில் சட்டத்தரணிகளாக இல்லாத சமரச முயற்சியாளர்கள் குடும்பச் சட்டத்தில் கட்டாயமாக ஓரளவு பயிற்சி பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும். மேலும், குடும்பம் சார்ந்த வன்முறைக்குரிய அறிகுறிகளை எப்படி அடையாளம் காணுவது என்று எல்லாச் சமரச முயற்சியாளர்களும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

## சமரசத் தீர்வுகள் எவ்வாறு நிறைவேற்றப்படும்?

ஒரு சமரசத்தின் பின்னர் வழங்கப்படும் சமரசத் தீர்வினை நிறைவேற்றும்படி கோரி நீங்கள் குடும்ப நீதிமன்றத்தில ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். அவ்வாறான விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்டதும் நீதிமன்றம் அந்தச் சமரசத் தீர்வு சில நிபந்தனைகளுக்கு அடங்குமாயின் அதனை ஒரு நீதிமன்ற உத்தரவு போன்று எடுத்து நிறைவேற்றுவதெனத் தீரமானிக்க முடியும்.

## நன்மைகளும் தீமைகளும்

சமரசம் என்பது நல்ல ஒரு முயற்சி எனச் சிலர் சொல்லுவதற்கு காரணங்களாக இவை உள்ளன:

- இது செயல்திறன் கூடிய ஒரு முயற்சி சம்பிரதாய நடைமுறைகள் குறைவானது நீதிமன்றத்துக்குப் போவதைவிடச் செலவில் குறைவானது.
- இச்செயல்முறை மாற்றங்களுக்கு இடம் அளிக்கிறது.
- உங்கள் சர்ச்சைக்கு யார் சமரச முயற்சியாளராகக் கடமையாற்றுவார் என்பதை நீங்களும் உங்கள் முந்திய துணைவரும் தெரிவு செய்ய முடியும்.

எனினும், குடும்பச் சட்டச் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு சமரசம் ஒரு நல்ல வழியல்ல என்று அநேகம்பேர் கூறுகிறார்கள். இதில் சமரச முயற்சியாளருக்கு மிகுந்த அதிகாரம் கொடுக்கப்பட்டு உள்ளதுடன் அவர் நியாயமற்ற முடிவுகளையும் எடுக்கக்கூடும். அதுமட்டுமன்றிப் பெண்கள் விடயத்தில் சமரசம் நன்கு தொழிற்படாமல் போகலாம். ஏனெனில் பல பெண்களுக்கு சட்டத்தரணி ஒருவரை அமர்த்தும் பணவசதி இருப்பதில்லை. சட்டத்தரணி ஒருவர் உங்களுக்கு இல்லையென்றால் உங்களுடைய முழு உரிமைகளும் உங்களுக்குத் தெரியாமல் போகலாம் என்பதுடன், உங்கள் வழக்கு வாதம் பற்றி சமரச முயற்சியாளரை எப்படி நம்பவைப்பது என்று நீங்கள் அறியாமல் இருக்கலாம்.

## குடும்பச் சட்டச் சமரசம் பற்றிச் சட்டம் என்ன சொல்லுகிறது

உங்கள் உரிமைகள் பற்றி சமரசச் சட்டவாக்கம் (Arbitration Act) சொல்லுகின்ற முக்கியமான விடயங்கள் இவை:

- எல்லாக் குடும்பச் சட்ட சமரச முயற்சிகளும் கனேடிய அல்லது ஒன்ராறியோ சட்டத்தினைப் பின்பற்றி நடக்க வேண்டும். அப்படியில்லாது போனால் அவை சட்டரீதியானவையாகக் கருதப்படுவதில்லை. உதாரணமாக, ஒரு திருமணச் சோடி விவாகரத்துப் பெறும்பொழுது ஒவ்வொரு வாழ்க்கைத் துணையாளும் (spouse) குடும்பச் சொத்தின் பெறுமதியில் அரைவாசிப்பங்கினைப் பெற வேண்டும் என்று கனேடிய சட்டங்கள் சொல்லுகின்றன என்பதால், குடும்பச் சொத்தின் பெறுமதியில் பாதிப்பங்குக்கு மேல் உங்கள் கணவர் எடுக்க முடியும் என்று சமரச முயற்சியாளர்கள் விதிக்க முடியாது.
- குடும்பச் சட்டச் சமரச முயற்சியாளராக இல்லாத ஒருவர் செய்யும் ஒரு பிரத்தியேக முடிவு ஆனது சட்டரீதியாக யாரையும் கட்டுப்படுத்துவது இல்லை என்பதுடன் அதனை நிறைவேற்றவும் முடியாது.

- குடும்பச் சட்டச் சமரச முயற்சியில், *குடும்பச் சட்ட சட்டவாக்கம் (Family Law Act)* என்பது *சமரசச் சட்டவாக்கம் (Arbitration Act)* என்பதைவிடக் கூடிய முக்கியத்துவம் கொண்டதாக அமைந்துள்ளது. நீதிமன்றம் குடும்பச் சட்டத் தத்துவங்களையே பயன்படுத்த வேண்டும்.
- சமரசத் தீர்வுகள் எல்லாமே "குடும்பச் சார்பு உடன்படிக்கைகள" (domestic contracts) என்று கருதப்படுகின்றன. எல்லாக் குடும்பச் சார்பு உடன்படிக்கைகளையும் கையாளும் அதேமுறையிலேயே சமரசத் தீர்வுகளையும் நீதிமன்றம் நடத்த வேண்டும்.
- பிள்ளைகள் சம்பந்தமாக வழங்கப்படும் எந்தச் சமரசத் தீர்வும் **"பிள்ளையின் மிகச்சிறந்த நலன்களை"** பின்பற்றி செய்யப்பட வேண்டும். பிள்ளையின் மிகச் சிறந்த நலனுக்கு எது பொருத்தமானது என்று தீர்மானிக்கும் பொழுது குடும்பச் சட்ட நீதிமன்றம் கருதும் அதே விடயங்களையே சமரச முயற்சியாளர்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விடயங்கள் *பிள்ளைகள் சட்டச் சீர்திருத்த சட்டவாக்கம் (Children's Law Reform Act)* பிரிவு 24 இல் பட்டியலிட்டுக் கூறப்பட்டு உள்ளன.

- சமரசத் தீர்வு ஒன்றுக்கு எதிராக **மேன்முறையீடு செய்வதற்குரிய அனுமதி** வழங்கும்படி கோரி நீதிமன்றத்திடம் கேட்கும் உரிமை உங்களுக்கு எப்பொழுதுமே உண்டு. அந்த உரிமையை நீங்கள் விட்டுக்கொடுக்க முடியாது. சம்பந்தப்பட்ட தீர்வினை நீங்கள் எதிர்த்தால், சமரசத் தீர்வின் இடத்தில் நீதிமன்றம் தனது முடிவினைப் புகுத்துவதற்கு முடியும். வழங்கப்பட்ட சமரசத் தீர்வில் குடும்பச் சட்டத்துடன் தொடர்பில்லாத ஏதாவது கூறப்பட்டு இருந்தால், அல்லது நீதிமன்றம் விதித்து இருக்க முடியாத ஒன்று அத்தீர்வில் விதிக்கப்பட்டு இருந்தால், நீதிமன்றம் இவ்வாறு செய்யும். கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றிய சமரசத் தீர்வுகள் *பிள்ளைகள் சட்டச் சீர்திருத்த சட்டவாக்கத்தினைப்* பின்பற்றுகின்றனவா என்பதையும் நீதிமன்றம் பரிசோதிக்கும். பிள்ளைகளின் மிகச்சிறந்த நலன்களைக் கருதி விதிக்கப்படும் உத்தரவுகளையே நீதிமன்றம் நிறைவேற்றும்.
- குடும்பச் சட்ட சமரசத் தீர்வுகள் எல்லாம் எழுத்து வடிவத்தில் வரையப்பட்டு இருத்தல் வேண்டும்.
- சட்டத்தரணிகளாக இல்லாத குடும்பச் சட்ட சமரச முயற்சியாளர் யாவரும் 2008 ஏப்பிரல் மாதம் தொடக்கம் கனேடிய குடும்பச் சட்டத்தில் பயிற்சி பெறவேண்டும். சமரச முயற்சியாளர்கள் யாவரும் குடும்பச் சார்பு வன்முறைபற்றி அறிவதற்காகப் பயிற்சி பெறவேண்டும்.

- சமரசம் சம்பந்தப்பட்ட செயல்முறை நியாயமான ஒன்றாக அமைவதைச் சமரச முயற்சியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு, உங்கள் உறவில் எப்பொழுதாவது வன்முறை அல்லது துர்ப்பிரயோகம் இடம்பெற்றது உண்டா என்று அவர்கள் ஆராய வேண்டும். உங்கள் உறவில், நீங்களும் உங்கள் முந்திய வாழ்க்கைத் துணையாளும் சம அளவிலான அதிகாரமும் கட்டுப்பாடும் கொண்டு இருக்கிறீர்களா என்பதை அவர்கள் பரிசோதிக்க வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலைகளில் உங்களைப் பாதுகாக்கும் விதத்தில் ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரம் சமரச முயற்சியாளர்களுக்கு இருக்கிறது என்ற போதிலும், உங்கள் வாழ்க்கைத் துணை ஆனவர் முன்பு வன்முறை அல்லது துர்ப்பிரயோகம் செய்து இருந்தால், உங்களை அவர் அடாவடித்தனம் செய்ய அல்லது பயமுறுத்த முயன்றிருந்தால், அல்லது உங்களைத் தன் சுயநலத்துக்குப் பயன்படுத்தி இருந்தால், சமரச முயற்சி நல்ல பலனைத் தருவதில்லை என்ற கருத்தைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.
- சமரச முயற்சியை நீங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக **சுயாதீன முறையிலான சட்ட ஆலோசனையை** நீங்கள் பெற்றுள்ளதாகக் கூறும் ஒரு படிவத்தில் கையொப்பம் இடவேண்டும்.
- சமரச முயற்சியாளர்கள் ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் சட்ட மாஅதிபரின் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். குறித்த அக்கால இடையில் அவர்கள் சமரசம் செய்த ஒவ்வொரு குடும்பச் சட்ட வழக்கு பற்றியும் அவர்கள் அங்கு அறிவிக்க வேண்டும். தாம் செய்த எல்லாச் சமரசங்கள் சம்பந்தப்பட்ட பதிவுகளையும் சமரச முயற்சியாளர்கள் ஆகக் குறைந்தது 10 வருடங்களுக்காவது வைத்திருக்க வேண்டும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. **குடும்பச் சட்டச் சமரசம (TML 007)**
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.